

# நம்ம ஊரு சூப்பரு

நாம் ஒன்றிணைவோம்..
பசுமையும், தூய்மையும் நமதாக்குவோம்...

Har Ghar Jal
Jal Jeevan Mission

சுத்தமான இந்தியா
தூய்மை பாரத இயக்கம்

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக அனைத்து ஊராட்சிகளிலும் ஆகஸ்ட் 15 அன்று கிராம சபை கூட்டத்தின் போது துவங்கப்பட்டது. இந்த சிறப்பு 'நம்ம ஊரு சூப்பரு' என்ற மக்கள் இயக்கம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஆகஸ்ட் 20 முதல் அக்டோபர் 2 வரை நடத்தப்பட்டது.










## நம்ம ஊரு சூப்பரு

தமிழகத்தின் கிராமப்புறங்களில் பல ஆண்டுகளாக சுகாதாரம் என்பது குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளது. மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் பல ஆண்டுகளாக பல்வேறு முயற்சிகளை செயல்படுத்தி வருகின்றன.

இந்தியாவில், கிராமப்புற சுகாதாரத் திட்டம் 1954 ஆம் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டு, பின் 1981 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு மூலம் கிராமப்புறங்களில் சுகாதார பாதுகாப்பு 1% மட்டுமே என்பது கண்டறியப்பட்டது. மக்களிடையே சுகாதாரத்தை மேம்படுத்தவும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், பெண்களுக்கு தனியுரிமை மற்றும் கண்ணியத்தை பாதுகாக்கவும் 1986 இல் மத்திய கிராமப்புற சுகாதாரத் திட்டம் (CRSP) ஒன்றிய அரசால் துவங்கப்பட்டது. 1999 இல் சுகாதார நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் வீட்டுக் கழிப்பறைகளை அமைப்பதற்கும் முழு சுகாதார பிரச்சாரத்தை (TSC) ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியது. 2012 ஆம் ஆண்டில், TSC ஆனது நிர்மல் பாரத் அபியான் (NBA) என்று மாற்றப்பட்டது.

பின் உலகளாவிய சுகாதாரத்தை அடைவதற்கான முயற்சிகளை விரைவுபடுத்துவதற்காக ஒன்றிய அரசு தூய்மை பாரத இயக்கம் - ஊரகம் (SBM-G) 2014 இல் தொடங்கப்பட்டு, திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை அடைந்தது. SBM-G 2 ஆம் கட்டம் (2020-21 முதல் 2024-25 வரை) கட்டம் 1 இன் ஆதாயங்களைத் தக்கவைப்பதுடன், திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை முறைகளில் தன்னிறைவு அடைவதற்கும் வழிவகை செய்யும் பொருட்டு தொடங்கப்பட்டது.

சுற்றுச்சூழல் தூய்மையான கிராமமாக அடையவும், இறுதியில் அழகியல் நிலையை நிலைநிறுத்தவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், 'நம்ம ஊரு சூப்பரு 'Namma Ooru Superu' பிரச்சாரம், சுகாதாரம், திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் கிராமப்புற சமூகத்தினரிடையே ஒரு நடத்தை மாற்றத்தை கொண்டு வர தொடங்கப்பட்டது. இந்த இயக்கம் மக்கள் பங்களிப்புடன் நடைபெறும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக அனைத்து ஊராட்சிகளிலும் ஆகஸ்ட் 15 அன்று கிராம சபை கூட்டத்தின் போது துவங்கப்பட்டது. இந்த சிறப்பு 'நம்ம ஊரு சூப்பரு' என்ற மக்கள் இயக்கம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஆகஸ்ட் 20 முதல் அக்டோபர் 2 வரை நடத்தப்பட்டது.





## குறிக்கோள் :

- ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்த, சமூகங்கள் நிலையான, பாதுகாப்பான, சுகாதாரம் மற்றும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்தல்.
- திட மற்றும் திரவக் கழிவுகளை மூலப்பிரிப்பு, கழிவுகளைக் குறைத்தல், திட மற்றும் திரவக் கழிவுகள் உருவாகும் இடத்திலேயே கழிவு மேலாண்மை செய்யும் நடைமுறைகளை மேம்படுத்துதல்.
- ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியை (Singe Use Plastic-SUP) தடை செய்வது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் ஒருமுறை பயன்படுத்தும் நெகிழி பொருட்களுக்குரிய மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
- பாதுகாப்பான குடிநீர், திரவக்கழிவு மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், நீர் பாதுகாப்பு மற்றும் தண்ணீரை மறுபயன்பாடு செய்வது தொடர்பான பணிகளை மேற்கொள்வது.
- சுற்றுப்புற சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் பொது இடங்களில் குப்பை கொட்டுவதை தடுத்து சுற்றுப்புறத்தை தூய்மையாகவும், பசுமையாகவும் பராமரிக்க, சுற்றுப்புற சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

## உறுதிமொழி

“நான் எப்போதும் மலம் கழிக்க கழிப்பறையை மட்டுமே பயன்படுத்துவேன். குப்பைகளை தரம் பிரித்து தூய்மை காவலர்களிடம் வழங்குவேன். “என் குப்பை என் பொறுப்பு” என்பதை உணர்ந்து செயல் படுவேன். எனது வீட்டிலிருந்து வெளியேறும் கழிவுநீரைத் தெருக்களில் தேங்க விடாமல் பாதுகாப்பாக அகற்றுவேன். எப்போதும் எனது சுற்றுப்புறத்தை தூய்மையாக பராமரிப்பேன். கடைகளுக்கு வெளியே செல்லும்போது துணிப்பையை உடன் எடுத்துச் செல்வேன். நமது கிராமத்தை எழில்மிகு கிராமமாக மாற்றும் முயற்சியில் நான் பங்கேற்பதுடன், என் குடும்பத்தினரையும் பங்கேற்க வைப்பேன் என உளமார உறுதி கூறுகிறேன்”








நமது கிராமத்தை எழில்மிகு கிராமமாக மாற்றும் முயற்சியில் நான் பங்கேற்பதுடன், என் குடும்பத்தினரையும் பங்கேற்க வைப்பேன் என உளமார உறுதி கூறுகிறேன்”







20 ஆகஸ்ட் 2022 | 02 செப்டம்பர் 2022

## பொது நிறுவனங்கள் / இடங்களை பெருமளவில் சுத்தம் செய்தல்

- கிராம ஊராட்சிகளில் குடியிருப்பு வாரியாக குப்பைக் கொட்டும் இடங்களைக் கண்டறிதல் (பொது இடங்கள், குப்பைக் கிடங்கு, குப்பைக் கொட்டுதல் போன்றவை) மற்றும் துப்புரவு நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்கான ஆட்கள் மற்றும் பொருட்கள் போன்ற வளங்களை வரைபடமாக்குதல்.
- தூய்மை காவலர்கள், சுகாதாரப் பணியாளர்கள், நேரு யுவ கேந்திரா (NYK) தன்னார்வ தொண்டர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் (NGO, NSS, NCC) சுற்றுச்சூழல் அமைப்புகள் போன்றவற்றை ஈடுபடுத்தி மேலே குறிப்பிட்டுள்ள படி தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய பகுதிகள் (Hotspot) வெகுஜன துப்புரவு இயக்கத்தை ஏற்பாடு செய்ய வேண்டும்.
- பிரச்சாரத்தின் போது அகற்றப்படும் கழிவுகளை அகற்றுவதை உறுதி செய்வதற்காக ULB களுடன் ஒருங்கிணைப்பு
- பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் பிற அரசு கட்டிடங்கள் / நிறுவனங்களில் வெகுஜன துப்புரவு இயக்கங்களை நடத்துதல்
- பூங்காக்கள், பேருந்து நிலையங்கள், மத / சுற்றுலா தளங்கள் மற்றும் பிற பொது இடங்களில் பொது மக்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஈடுபாட்டுடன் தூய்மை இயக்கிகள் செயல் படுவதை உறுதி செய்தல்
- சமூகம், நேரு யுவ கேந்திரா (NYK) தன்னார்வலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், NSS, NCC, சுற்றுச்சூழல் கிளப்புகள் மற்றும் பிற தொடர்புடைய அமைப்புகளை அணி திரட்டுவதன் மூலம் கிராம ஊராட்சியில் குறைந்தபட்சம் ஒரு நீர் நிலையை சுத்தம் செய்தல்
- கழிவுநீர் வடிகாலில் அடைப்பு ஏற்படாமல் இருக்க சுத்தம் செய்யப்பட வேண்டும்
- சுகாதார வளாகங்கள் மற்றும் பொதுக் கழிப்பறைகளை சுத்தம் செய்ய வேண்டும்







### நோக்கம் :

வெகுஜன துப்புரவு நடவடிக்கையின் முடிவில், பொது இடங்களில் குப்பை போடாதது குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும், மேலும் பொது இடங்களில் குப்பை கொட்டினால் கிராம ஊராட்சி விதிக்கும் அபராதம் குறித்து சமூகத்திற்கு தெரிவிக்க வேண்டும்






நம்ம
ஊரு
சூப்பரு
கிருஷ்ணகிரி மாவட்டம்
தளி ஊராட்சி ஒன்றியம்
ஜாகீர் கோடிப்பள்ளி ஊராட்சி
கிராம சபா கூட்டம்


நம்ம
ஊரு
சூப்பரு
திருப்பூர் மாவட்டம்
திருப்பூர் ஊராட்சி ஒன்றியம்
கணக்கம்பாளையம் ஊராட்சி















27 ஆகஸ்ட் 2022 | 2 செப்டம்பர் 2022

## தண்ணீர், சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை குறித்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு

- திடக்கழிவு மற்றும் திரவக் கழிவுகளை முறையாக அகற்றுவதில் பள்ளி ஆசிரியர்கள் / பேராசிரியர்கள் /அலுவலர்கள் சிறப்பு கவனம் செலுத்தி பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் கழிவு மேலாண்மை விழிப்புணர்வு செய்தல்.
- திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற நிலையின் நிலைத்த தன்மையை (ODF) உறுதி செய்வதற்காக மாணவர்களிடையே பாதுகாப்பான சுகாதாரம் மற்றும் தனிப்பட்ட சுகாதார நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் தூய்மை மற்றும் சுகாதார நடைமுறைகளை குழந்தைகளிடையே புகுத்துவதற்காக பள்ளி மற்றும் கல்லூரிகளில் துப்புரவு மற்றும் கழிவு மேலாண்மையில் ஆர்வமுள்ள மாணவர்களுடன் பள்ளி ஆசிரியர் தலைமையில் தூய்மைக் குழு அமைக்கலாம்.
- பாதுகாப்பான குடிநீர், தண்ணீரைப் பயன்படுத்துதல், சமையலறைத் தோட்டம் மற்றும் உறிஞ்சுக் குழி போன்ற கழிவுநீர் மேலாண்மை வசதிகளை அமைத்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு அருகிலுள்ள திடக்கழிவு மேலாண்மை தளங்கள், மண்புழு உரம் அலகுகள், நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையங்கள், நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகள் மற்றும் கிராம பஞ்சாயத்தில் உள்ள மற்ற கழிவு பதப்படுத்தும் அலகுகளுக்கு வெளிப்பாடு பார்வைக்கு ஏற்பாடு செய்யலாம்.
- பள்ளி / கிராம ஊராட்சி அளவில்' 'Waste to Wealth' என்ற கருத்தில் மாணவர்களால் உருவாக்கப்பட்ட முன்மாதிரி மாதிரிகள் மற்றும் முன் முயற்சிகள் அங்கீகரிக்கப்படலாம்.










3 செப்டம்பர் 2022 | 16 செப்டம்பர் 2022

## சுய உதவிக்குழு (SHG) உறுப்பினர்கள் மற்றும் நிறுவனங்களின் மூலம் வீடுகளில் நீர், சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு

- மலம் கழிப்பதால் சுற்றுச்சூழல் மற்றும் நீர்நிலைகள் மாசுபடுவதை தடுக்கும் வகையில், அனைத்து குடும்ப உறுப்பினர்களும் கழிப்பறைகளை தொடர்ந்து பயன்படுத்துவதை உறுதி செய்தல்.
- சுய உதவிக்குழு (SHG) உறுப்பினர்கள் / ஊக்குவிப்பாளர்கள் தூய்மைக் காவலர்களுடன் வீடு வீடாகச் சென்று, குப்பைகளை சேகரிக்கும் போது, பிரிக்கப்பட்ட கழிவுகள் மட்டுமே வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- ஈரமான கழிவுகளை வீட்டிலேயே உரமாக்குவது குறித்த விழிப்புணர்வு, குறைத்தல், மறு பயன்பாடு மற்றும் மறு சுழற்சி போன்ற 3R (Reduce, Reuse and Recycle) கருத்தை பின்பற்றுதல் மற்றும் பொது இடங்களில் குப்பைகளை கொட்டாமல் இருப்பதை உறுதி செய்தல்.
- வீட்டிலேயே பிரிப்பதை உறுதி செய்வதற்காக, மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் போன்ற கழிவுகளின் வகைகளை நிரூபிக்க கிராம அளவிலான கூட்டத்தை நடத்துதல்.
- சுய உதவிக்குழுக் கூட்டங்களை நடத்தி, கழிவு வகைகள், பிரித்தல் மற்றும் சுய உதவிக்குழு (SHG) உறுப்பினர்களின் வீடுகளில் 100% பிரிப்பதை உறுதி செய்வதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுதல்
- சுய உதவிக்குழு உறுப்பினர்களால் களப்பரி சோதனைக் கருவியை (FTK) பயன்படுத்தி, நீரின் தரம் சோதனை மூலம் பாதுகாப்பான குடிநீர் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- ஜல் ஜீவன் மிஷனுக்கான சமூக பங்களிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- நீரின் பயன்பாடு, நீர் சேமிப்பு மற்றும் மறுபயன்பாடு பற்றிய விழிப்புணர்வை சமூகத்தினரிடையே ஏற்படுத்துதல்.
- தெருக்கள் மற்றும் சாலைகளில் கழிவு நீர் தேங்குவதை தடுக்க வீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் சமையலறைத் தோட்டம் அமைப்பது அல்லது தனி நபர் உறிஞ்சு குழிகள் அமைப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- மருத்துவர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் போன்றவர்களைக் கொண்டு அனைத்து மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHC), அங்கன்வாடி மையங்கள் போன்றவற்றில் பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் கழிவு

### நோக்கம்:

கிராம ஊராட்சி அளவில் நடத்தப்படும் கூட்டத்தில் கழிவுகளை பிரிக்கும் குடும்பங்கள் அங்கீகரிக்கப்பட்டால், சிறப்பாகச் செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு, மாவட்ட ஆட்சியர் / தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் தொகுதி / மாவட்ட அளவில் விருதுகள் வழங்கப்படும். பிரச்சாரக் காலத்திற்குப் பிறகு, பிரிக்கப்பட்ட குப்பைகளை மட்டுமே தூய்மைக் காவலர்கள் சேகரிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்படலாம். திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை வசதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள உள்கட்டமைப்பு வசதிகளை திறம்பட பயன்படுத்த வேண்டும்





17 செப்டம்பர் 2022 | 23 செப்டம்பர் 2022

## ஒரு முறை பயன்படுத்தும் நெகிழிகளைத் தடை செய்தல் மற்றும் ஒரு முறை பயன்படுத்தும் நெகிழிப் பொருட்களுக்கு (SUP) மாற்றுப் பொருள் பயன்பாட்டை ஊக்குவித்தல்

- ஒரு முறை பயன்படுத்தும் நெகிழியை (SUP) தடைசெய்வது பற்றிய விழிப்புணர்வு மற்றும் ஒரு முறை பயன்படுத்தும் நெகிழிக்கு மாற்றுப் பொருள் பயன்பாட்டை ஊக்குவித்தல்.
- ஒரு முறை பயன்படுத்தும் நெகிழிகளுக்கு தடை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பேரணியை ஏற்பாடு செய்து மீண்டும் மஞ்சப்பை என்ற கருத்தை வலியுறுத்துதல்.
- நெகிழி மீளப் பெறுதல் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், நெகிழியை துண்டாக்குவது மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து சாலைகள் அமைப்பதை உறுதி செய்தல்.
- வணிக நிறுவனங்களால் ஒரு முறை பயன்படுத்தும் நெகிழியை பயன்படுத்துவதற்கான விழிப்புணர்வு மற்றும் அபராதம் விதித்தல்.
- முடிந்த வரை CSR நிதி மூலம் 'மீண்டும் மஞ்சப்பை' பிரச்சாரத்தை ஊக்குவிக்க, 'நம்ம ஊரு சூப்பரு' சின்னத்துடன் கூடிய துணிப்பைகள் விநியோகம்.





### நோக்கம் :

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நெகிழி மீள் பெறும் கொள்கை அறிமுகப்படுத்தப்பட வேண்டும், மேலும் நிறுவப்பட்ட நெகிழிக் கழிவு மேலாண்மை அலகுகள் செயல்பாட்டு நிலைக்கு கொண்டுவரப்பட வேண்டும். ஒருமுறை பயன்படுத்தும் நெகிழியை தடைசெய்வது குறித்தும், வணிக நிறுவனங்கள் பயன்படுத்தும் SUP பயன்பாட்டிற்கு அபராதம் விதிப்பது குறித்தும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். துணிப்பைகளை எடுத்துச் செல்வதை சமூகத்தின் பழக்கமாக மாற்ற வேண்டும்



24 செப்டம்பர் 2022 | 1 அக்டோபர் 2022

## சுத்தமான மற்றும் பசுமையான கிராமங்கள்

- ஊட்டச்சத்துக்கான ஆதாரமாக செயல்படும் வீடுகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் போன்றவற்றில் கீரைகள், முருங்கைக்காய், நெல்லிக்காய், பப்பாளி மற்றும் இனிப்புக் கிழங்கு போன்றவற்றைக் கொண்ட சத்துணவுத் தோட்டம் அமைப்பதை ஊக்குவித்தல்.
- பசுமை வேலியாக செயல்படும் திடக்கழிவு மேலாண்மை தளங்களை சுற்றி மரக்கன்றுகளை நடுதல் மற்றும் சுற்றுச்சூழலில் தூய்மையின் பார்வையை உறுதி செய்தல்.
- கிராம ஊராட்சியில் தரிசு நிலங்களைக் கண்டறிந்து, மியாவாக்கி மற்றும் பிற முறைகளைப் பயன்படுத்தி மரக்கன்றுகள் நடும் பணிகளை மேற்கொண்டு பசுமையை அதிகரிக்க மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் இணைந்து தூய்மையான மற்றும் பசுமையான முயற்சி எடுக்கப்படும்.









### நோக்கம்:

கிராம ஊரட்சிகளின் பசுமை மற்றும் காட்சித் தூய்மை மேம்படுத்தப்பட வேண்டும், மேலும் தரிசு நிலத்தை திறம்பட பயன்படுத்த வேண்டும்.

## குப்பை கொட்டும் இடங்கள் :

**47,339** குப்பைக் கொட்டும் இடங்கள் **4,68,273** பங்கேற்பாளர்களுடன் சுத்தம் செய்யப்பட்டது. இந்த இடத்தில் சேகரிக்கப்பட்ட **1,181** மெட்ரிக் டன் திடக்கழிவுகள் செயலாக்க திடக்கழிவு மேலாண்மை அலகுகளுக்கு அனுப்பப்பட்டது. மேலும், இந்த இடத்தில் **2,75,132** மரக்கன்றுகள் நடப்பட்டன.












## பொது இடங்கள்:

**10,318** பேருந்து நிருத்தம், **733** சந்தைகள், **560** பூங்கா மற்றும் **5,219** சுற்றுலா / வழிபாட்டு தளங்கள் போன்ற இடங்கள் சுத்தம் செய்யப்பட்டது. இந்த இடங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட **307** மெட்ரிக் டன் திடக்கழிவுகள் செயலாக்கத்திற்கு அனுப்பப்பட்டது.



## அரசு கட்டிடம் / நிறுவனங்கள்:

**4,038** சமுதாயக் கூடங்கள், **2,568** துணை சுகாதார மையங்கள், **8,726** ஊராட்சி அலுவலகங்கள், **2,244** பொது சேவை மையங்கள், **11,487** நியாயவிலைக் கடைகள், **6,095** கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்கள், **1,561** பொது சுகாதார மையங்கள், **7,875** கிராம வறுமை ஒழிப்பு குழு கட்டிடங்கள் மற்றும் **1,230** முதன்மை வேளாண்மை கடன் சங்கங்கள் சுத்தம் செய்யப்பட்டது.

இந்த இடங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட **1,042** மெட்ரிக் டன் திடக்கழிவுகள் செயலாக்கத்திற்கு அனுப்பப்பட்டது.

**3,241** துணை சுகாதார மையங்கள் மற்றும் பொது சுகாதார மையங்களில் சுய உதவிக் குழு நபர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.





## நீர் நிலைகள்:

**13,094** குளங்கள், **11,101** தண்ணீர் தொட்டிகள், **13,964** ஊராட்சிக் கிணறுகள், **9,790** மற்ற நீர் நிலைகள் சுத்தம் செய்யப்பட்டது.

இந்த இடங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட **1,130** மெட்ரிக் டன் திடக்கழிவுகள் செயலாக்கத்திற்கு அனுப்பப்பட்டது.

## கழிவறைகள்

**1,852** சமுதாய சுகாதார வளாகங்கள், **5,998** ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், **812** ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள், **885** பொதுக் கழிப்பறைகள் **464** வரிசைக் கழிப்பறைகள் சுத்தம் செய்யப்பட்டது.







## பள்ளிகள்

**13,448** தொடக்கப் பள்ளிகள், **4,440** நடுநிலைப் பள்ளிகள், **1,755** உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் **1,660** மேல்நிலைப் பள்ளிகள் சுத்தம் செய்யப்பட்டன. **13,69,021** பள்ளி மாணவர்களுக்கு தண்ணீர், சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை குறித்து விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

இந்த இடத்தில் சேகரிக்கப்பட்ட **351** மெட்ரிக் டன் திடக்கழிவுகள் செயலாக்கத்திற்கு திடக்கழிவு மேலாண்மை அலகுகளுக்கு அனுப்பப்பட்டது.

**26,477** மரக்கன்றுகள் நடப்பட்டன.

**2,17,732** பள்ளி மாணவர்கள் ஒருமுறை பயன்படும் நெகிழிகளை தடை செய்தல் மற்றும் நெகிழிக்கான மாற்றுப் பொருள் பயன்பாட்டை உறுதி செய்தல் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரத்தில் கலந்து கொண்டனர்.

**8,61,572** பள்ளி மாணவர்கள் ஊராட்சியிலுள்ள திட மற்றும் திரவக்கழிவு வசதிகளை பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர்.







## கல்லூரிகள்

**18,798** கல்லூரி மாணவர்களுக்கு தண்ணீர், சுகாதாரம் மற்றும் கழிவு மேலாண்மை குறித்து விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

**6,144** மரக்கன்றுகள் நடப்பட்டன.

**6,897** கல்லூரி மாணவர்கள் ஒருமுறை பயன்படும் நெகிழிகளை தடை செய்தல் மற்றும் நெகிழிக்கான மாற்றுப் பொருள் பயன்பாட்டினை உறுதி செய்தல் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரத்தில் கலந்து கொண்டனர்.

**12,263** கல்லூரி மாணவர்கள் ஊராட்சியிலுள்ள திட மற்றும் திரவக்கழிவு வசதிகளை பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டனர்.




## அங்கன்வாடிகள்

**22,695** அங்கன்வாடிகள் சுத்தம் செய்யப்பட்டன. இந்த இடங்களில் சேகரிக்கப்பட்ட **387** மெட்ரிக் டன் திடக்கழிவுகள் செயலாக்கத்திற்கு திடக்கழிவு மேலாண்மை அலகுகளுக்கு அனுப்பப்பட்டது.

**18,653** அங்கன்வாடிகளில் சுய உதவிக் குழு மகளிர் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## பிற சாதனைகள்

**1,569** கி.மீ கழிவுநீர் வடிகால் சுத்தம் செய்யப்பட்டது

**9,52,853** வீடுகளில் **6,97,557** சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

**15,317** கடைகள் வணிக நிறுவனங்களில் ஒருமுறை பயன்படுத்தும் நெகிழிப் பொருட்கள் உள்ளதா என ஆய்வு செய்யப்பட்டது. மேலும், ரூபாய். **2,55,846** அபாரதத் தொகை















## சிறப்பு விருது

ஜல்சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் சுகாதாரத்துறை நடத்திய விழாவில், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களால், தமிழகத்திற்கு விருது வழங்கப்பட்டது. இவ்விருதினை அக்டோபர் திங்கள் 2 - ம் நாள் புது தில்லியில் நடைபெற்ற தூய்மை பாரத விழாவில் மாண்புமிகு தமிழக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே ஆர். பெரியகருப்பன் அவர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலர் திருமதி. பெ.அமுதா இ.ஆ.ப அவர்கள் குடியரசுத் தலைவர் அவர்களிடம் இருந்து பெற்றனர்.



நாம்
ஒன்றிணைவோம்..
பசுமையும்
தூய்மையும்
நமதாக்குவோம்...

திரு. மு.க. ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

www.tnrd.tn.gov.in
மார்ச் 2023